# "அவருடைய தீர்மானத்தின்படி"

## [8:29, 30]

ரோமர் 8:28ல் தேவனுடைய தீர்மானம் பற்றிய பவுலின் குறிப்பு, 29 மற்றும் 30ம் வசனங்களில், கர்த்தருடைய நோக்கம் பற்றிய ஒரு சுருக்கமான வரைகுறிப்பைக் கொடுக்கும்படி அவரைத் தூண்டிற்று:

> தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

ஜான் R. W. ஸ்டாட் என்பவர், இவ்வசனங்களிலும் இதைத்தொடர்ந்த வசனங்களிலும், பின்வரும் கருத்து நிலவுவதாக எழுதினார்,

> ... ஆவியானவரால் ஏவப்பட்ட [பவுலின்] மாபெரும் சிந்தையானது ... தேவனுடைய முழுமையான திட்டம் மற்றும் தீர்மானத்தை, ஒரு கடந்தகால நித்தியத்திலிருந்து இனிவரவிருக்கும் ஒரு நித்தியத்திற்கு, தெய்வீக முன்னறிவு மற்றும் முன்குறித்தலிலிருந்து, நம்மை ஒருவிஷயமும் எப்போதும் முற்றிலுமாகப் பிரிக்க இயலாததான தெய்வீக அன்பிற்கு கூட்டிச் சேர்க்கிறது.[1]

### அறைகூவல் விடுக்கும் வசனப்பகுதி

ரோமர் 8:29, 30ஐ நாம் படிக்கத் தயாராகிக் கொண்டிருக்கையில், நாம் "ரோமருக்கு எழுதிய நிருபத்தினுடைய மிகவும் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்றை நெருங்கியிருக்கிறோம்,"[2] என்பதைப் புரிந்துகொள்ளுதல் அவசியமாக உள்ளது, இவ்விரு வசனங்களும் மிக அதிகமான இறையியல் விவாதங்களின் கவனக்குவிப்பிற்கு உரியவையாக இருந்துள்ளன. மோசஸ் E. லேர்டு என்பவர், "ஒருவேளை, புதிய ஏற்பாட்டின் எந்த வசனப்பகுதியும் சுருக்கமான இப்பகுதியில் [ரோமர் 8:28-30] தழுவப்பட்டுள்ளதைக் காட்டிலும் அதிக விரிவான நேரெதிர்க்கருத்துக்களை கொடுக்க எழுந்ததில்லை."[3]

29 மற்றும் 30 ஆகிய வசனங்கள் "கால்வினீயரின் உபதேசசட்டத்தை" வடிவமைப்பதாகவும் லேர்டு என்பவர் சுட்டிக்காண்பித்தார். ஜான் கால்வின் என்பவருடைய சிந்தாந்தங்களுக்குப் பழக்கமற்றவர்களுக்காக,[4] நமது வேதபாட வசனத்துடன் தொடர்புடைய [அவரது] கருத்துக்களில் சிலவற்றை மறு கண்ணோட்டமிட என்னை அனுமதியுங்கள்:

- தேவன், தாம் இரட்சிக்கும் தனிநபர்களை முன்னறிந்திருக்கிறார்.
- இவர்களை - இவர்களின் பகுதியிலுள்ள எந்தத் தகுதியினாலும் அல்ல, ஆனால் தமது ராஜரீக சித்தத்தின் வெளிப்பாடு என்ற வகையில் - இரட்சிப்பதற்கு அவர் முன்குறித்திருக்கிறார் [முன் தீர்மானித்திருக்கிறார்].
- இரட்சிக்கும்படி அவர் முன்குறித்திருக்கிறவர்களை அவர் பரிசுத்த ஆவியானவருடைய நேரடியான, எதிர்க்க இயலாத இயக்கத்தை அவர்களுக்கு அனுப்புவதன்மூலம் அழைத்தார். இது அவர்களை உயிர்த்துடிப்புள்ளவர்கள் ஆக்கியது (அவர்களை ஆவிக்குரிய வகையில் உயிருள்ளவர்கள் ஆக்கியது) மற்றும் அவர்களின் விசுவாசத்தைத் தூண்டியது.
- இவர்களை அவர் இரட்சித்தார் (நீதிமானாக்கினார்).
- இவர்கள் இரட்சிக்கப்பட ஒன்றும் செய்யவில்லை என்பதால், இவர்கள் இழந்துபோகப்படவும் ஒன்றும் செய்ய இயலாது. இவ்வாறாக, கேள்வி எதுவுமின்றி இவர்களைத் தேவன், ஒரு நாளிலே (பரலோகத்தில்) மகிமைப்படுத்துவார்.

இந்தக் கோட்பாடுகளை நீங்கள் ரோமர் 8:28, 29உடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இவ்வசனப்பகுதி கால்வினீயர்களுக்குப் பிரபலமானதாக இருப்பது ஏன் என்பதை உங்களால் காணமுடியும். அதேவேளையில், நீங்கள் கவனம் நிறைந்த ஒப்பீடுகளை ஏற்படுத்தினால், நீங்கள் இரண்டு சத்தியங்களைக் கவனிப்பீர்கள். முதலாவது, இவ்வசனப்பகுதி, மிகச்சரியாக வாசிக்கப்படும்போது, இது கால்வினீயர்கள் விரும்புகிறபடி வாசிக்கப்படுவதாக இருப்பதில்லை. இரண்டாவது, அவர்கள் இவ்வசனப்பகுதியுடன் தங்கள் இறையியலை அதிகமாகக் கூட்டிக்கொண்டனர்.

வில்லியம் பார்க்ளே என்பவரின் விளக்கங்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தகுதியானவையாக உள்ளன: "இது மிக மும்முரமாய்த் தவறாகப் பயன்படுத்தப்படும் ஒரு வசனப்பகுதியாக உள்ளது. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இது இறையியல் அல்லது தத்துவத்தின் [ஆழ்ந்தறிவுள்ளதொரு] சொல் விளக்கமாக இருக்கும்படிப் பவுல் ஒருக்காலும் அர்த்தப்படுத்தியதில்லை என்ற அடிப்படை உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும்."[5] ரோமர் 8:29, 30ல், பவுல் தேவன் சகலத்தையும் நன்மைக்கேதுவாக நடத்துகிறார் என்ற உண்மையைக் கிறிஸ்தவர்களுக்கு உறுதிப்படுத்தத் தொடர்ந்தார் (வசனம் 28). அந்த உறுதிப்பாடு பின்வருமாறு விளக்கப்படலாம்:

- தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டிருக்கிறார்.
- உலகம் எவ்வளவுதான் குழப்பமுள்ளதாகக் காணப்பட்டாலும், அந்தத் திட்டம் இன்னும் செயல்பாட்டில் உள்ளது. அதைத் தடுக்க முடியாது - அது தடுக்க இயலாதது. அது தொடர்ந்து *செய்யப்படும்;* அது நிறை*வேற்றப்படும்.*
- இவ்வாறாகப், பவுலின் வாசகர்கள் அந்தத் திட்டத்தின் அனுகூலங்களை எடுத்துக்கொண்டால், அவர்கள் வெற்றியாளர்களாக இருப்பார்கள் (வசனம் 37ஐக் காணவும்).

*அதுவே தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்குத் தேவைப்பட்ட உறுதிப்பாடாக இருந்தது. அதுவே நமக்கும் தேவையானதாக உள்ளது.*

## ஆறுதல் தரும் ஒரு வசனப்பகுதி *(8:29, 30)*

*இருந்தபோதிலும், ரோமர் 8:29, 30ல் பவுலின் சொல்விளக்கம் குறித்து நாம் இன்னமும் போராட வேண்டியதாக உள்ளது. அவர் ஏன் தம்மைப் பற்றி இவ்வாறு சொல்விளக்கப்படுத்தினார்? வேதபாட வசனத்தைப் பற்றிய நமது ஆய்வானது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படும்: தேவன் கடந்தகாலத்தில் என்ன செய்தார், அவர் நிகழ்காலத்தின்போது என்ன செய்துகொண்டிருக்கிறார், மற்றும் அவர் எதிர்காலத்தில் என்ன செய்வார் என்பவையே அந்த பாகங்களாகும்.*


**கடந்த காலத்தில்**

*நமது வேதபாட வசனப்பகுதியானது, முதலில் நீண்ட காலத்திற்கு முன்னர் தேவன் என்ன செய்தார் என்பதை வலியுறுத்துகிறது. 29ம் வசனம், "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ" என்று பேசுகிறது (வசனம் 29ஆ). "முன்னறிதல்" என்பது "அறிதல்" என்பதற்கான ginosko என்ற மிகப்பொதுவான கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது, இதற்கு முன் pro ("முன்னால்") என்ற சொல் இணைந்து வருகிறது.*

*தேவனுடைய முன்னறிவு என்பது நமது விசுவாசத்தின் அறிந்துகொள்ள இயலாத ரகசியங்களில் ஒன்றாக உள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்கள், தேவனுடைய அறிவானது ஒரு தனிநபரின் சுயாதீனமான சித்தத்தில் தலையிடாமல், அந்த நபர் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வார் என்று தேவன் முன்னதாகவே அறிவது எவ்வாறு, என்பதைப் புரிந்துகொள்வதைக் கடினமாகக் காண்கின்றனர். நாம், "அது நடக்குமென்று தேவன் அறிந்திருப்பார் என்றால், அந்த நபர் உண்மையிலேயே தேர்ந்துகொள்ளுதலைப் பெற்றிருந்தாரா?" என்று வியப்படைகிறோம். வழக்கம்போல, நமது சிந்தைகளுக்கு நேர்மாறான இரு கருத்துக்களாக உள்ளதை ஒப்புரவாக்கப் பவுல் முயற்சி எதையும் மேற்கொள்ள வில்லை.*


*பவுல் மனிதருடைய சுயாதீனமான சித்தத்தில், தேர்ந்துகொள்வதில் மனிதருக்குள்ள உரிமையில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது தெளிவு. ரோமருக்கு எழுதிய நிருபத்தில், பவுல் தமது வாசகர்கள் (சுயாதீனத்தின் செயல் ஒன்றை) செய்வதையோ அல்லது அதைச் செய்ய மறுப்பதையோ தேர்ந்துகொள்ளக்கூடும் என்ற மறைமுகமான கருத்தை நம்பும்படி அவர்களை ஊக்குவித்தார். இந்த நிருபம் முழுவதிலும் அவர், (பிற்பாடு தீமோத்தேயுக்கு எழுதியதான) "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" என்பதைச் சுட்டிக்காண்பித்தார் (1 தீமோத்தேயு 2:4; நடபடிகள் 10:34, 35; 2 பேதுரு 3:9ஆ ஆகிய வசனங்களை ஒப்பிட்டுக் காணவும்). இருந்தபோதிலும், ரோமர் 8:29ல் அவர், ஏதோ சில கருத்தில், அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட இருப்பவர்கள் யார் என்பதைத் தேவன் முன்னதாகவே அறிந்திருக்கிறார் என்று கூறினார். தேவனுடைய முன்னறிவானது மனிதகுலத்தின் சுயாதீனசித்தத்தில் தலையிடாதிருந்தது மற்றும் அது மனிதனுடைய பொறுப்பை ஒன்றுமற்றதாக்குவதில்லை என்பதை அறிவது பவுலுக்குப் போதுமானதாக இருந்தது.*

இருப்பினும், நம்மில் பெரும்பான்மையானவர்கள், வேதாகமரீதியான இவ்விரு சத்தியங்களையும் இசைவிக்கச் செய்ய முயற்சித்தலின் அவசியத்தை உணருகிறோம். தேவன் ஒரு சில தனிநபர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று முன்கண்டதில்லை, ஆனால் அதற்கு மாறாக குறிப்பிட்ட வகையான நபர் இரட்சிக்கப்படுவார் என்பதை அவர் முன்கண்டார். வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், இரட்சிக்கப்பட்ட குழு ஒன்றையும் இழந்துபோகப்பட்ட குழு ஒன்றையும் அவர் முன்கண்டார், மற்றும் ஒவ்வொரு தனிநபரும் இரட்சிக்கப்பட்ட குழுவிலா அல்லது இழந்துபோகப்பட்ட குழுவிலா, எங்கிருப்பது என்பதை அவரவரே தீர்மானிக்கின்றனர்.




ஜிம்மி ஆலென் என்பவர், இந்த நிலைப்பாட்டைப் பின்வருவது போன்று தொகுத்துரைத்தார்: தேவன் "தமது பிள்ளைகள் கீழ்ப்படிதலுடன் இருப்பார்கள் என்று முன்குறிக்கவில்லை, ஆனால் கீழ்ப்படிதல் உள்ளவர்கள் தமது பிள்ளைகளாயிருப்பார்கள் என்று முன்குறித்தார்."[6]

இந்த அணுகுமுறையானது அடிக்கடி, 30ம் வசனத்தின் "அழைத்தார்" என்ற வார்த்தையுடன் பிணைக்கப்படுகிறது: "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்" (வசனம் 30அ). "அழைத்தல்" என்பது *kaleo* ("அழைக்க") என்பதன் ஒருதரம் மாத்திரம் வருகிற வடிவத்தில் இருந்து வருவதாக உள்ளது. கொலோசெயர்களிடம் "ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்" என்று பவுல் கூறினார் (கொலோசெயர் 3:15). சபை என்பது "ஒரே சரீரமாக" உள்ளது (கொலோசெயர் 1:18). "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *ekklesia* என்ற கிரேக்க வார்த்தை, *kaleo* ("அழைக்க") என்பதன் ஒரு வடிவத்தை *ek* ("வெளியே") என்ற முன்னிடைச் சொல்லுடன் ஒன்றிணைப்பதாக உள்ளது. *Ekklesia* என்பது ஆவிக்குரிய இருளிலிருந்து தேவனுடைய ஒளியினிடத்தில் அழைக்கப்பட்டவர்களை குறிக்கிறது (1 பேதுரு 2:9ஐக் காணவும்). எபேசுவிலிருந்த சபைக்கு எழுதியபோது பவுல், சபையானது தேவனுடைய நித்திய தீர்மானத்தின் அங்கமாயிருந்தது என்று தெளிவுபடுத்தினார் (எபேசியர் 3:10, 11, 21ஐக் காணவும்). ஆகவே நாம் இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு சரீரம், அது "சபை" என்று அறியப்படும் "வெளியே அழைக்கப்பட்ட" மக்கள்கூட்டம் என்பதே தேவன் முன்கண்டதாக இருந்தது என்று முடிவு செய்ய இயலும். மீண்டுமாக, கர்த்தருடைய சபையின் உறுப்பினராவதா இல்லையா என்பது ஒவ்வொரு தனிநபரையும் பொறுத்த விஷயமாக உள்ளது.




“அறிதல்” என்பதற்கான (*ginosko* என்ற) வார்த்தையானது “அடிக்கடி, ‘அறிகிற’ நபருக்கும் அறியப்படுகிற பொருளுக்கும் இடையிலுள்ள *உறவைச்* சுட்டிக்காண்பிக்கிறது”[7] என்ற உண்மையின் அடிப்படையில் ஒரு துணைநிலைச் சிந்தனை உள்ளது. AB இதை வேதாகமம், ரோமர் 8:29ல் “those whom He [God] foreknew [of whom He was aware and loved beforehand]” என்ற சொற்றொடரைக் கொண்டு குறிப்பிடுகிறது. “முன்னறிதல்” என்ற வார்த்தையானது தேவன் செய்யத் திட்டமிட்டிருந்தது *என்ன* என்பதற்கு வலியுறுத்தப்படுவதைக் காட்டிலும் அதிகமாக தேவன் *யாரை* முன்னறிந்தார் என்ற விஷயத்திற்கு வலியுறுத்தப் படுவதில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது: தேவனுடைய திட்டமானது, அவர் தமது சிருஷ்டியுடன் ஒரு தனிப்பட்ட உறவுகொண்டிருக்கத் தீர்மானித்தலுடன் தொடங்கிற்று!

மேலே வரைகுறிப்பிடப்பட்ட அணுகுமுறையையே நான் வேதாகம போதகர்களுக்குப் பரிந்துரை செய்கிறேன். இது வேதபாட வசனத்தின் கோரிக்கைகளை நிறைவுசெய்கிறது, இது வேறிடத்திலுள்ள வேதாகமரீதியான போதனைக்குச் சீர்பொருத்தமானதாக உள்ளது, மற்றும் இது பெரும்பான்மையான மாணவர்களால் புரிந்துகொள்ளப்பட முடிகிறது. அதேவேளையில், “எந்தத் *தனிநபர்கள்* சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வார்கள் மற்றும் எவர்கள் அதை மறுதலிப்பார்கள் என்பதைத் தேவன் முன்னதாகவே அறிந்திருந்தால் விஷயம் என்னவாக இருக்கும்?” என்ற கேள்வியுடன் போதகர்களின் போராட்டத்தில் மதிப்பு இருக்கலாம். தேவனுடைய சர்வஞானத்தில் (அவர் சகலத்தையும் அறிந்தவராக இருக்கிறார் என்ற உண்மையில்) நாம் நம்பிக்கை கொண்டிருந்தால், இதை அவர் அறிய விரும்பினால் அவரால் அறியக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்பதை நாம் புரிந்துணர வேண்டும் (நடபடிகள் 18:10ஐ ஆழ்ந்து சிந்திக்கவும்).

இப்படிப்பட்ட விஷயங்களை அவர் தனிநபர்களின் சுயாதீன சித்தத்தில் இடையிடாமல் அறிய இயலுமா என்பது சிலருடைய அக்கறைக்குரிய கேள்வியாக உள்ளது. தேவனுடைய முன்னறிதல் பற்றி நான் புரிந்துகொண்டிராததவை அதிகம் உள்ளது, ஆனால் மேற்கண்ட கேள்விக்கு, ஆம் என்பதே பதிலாகும் என்று நான் நம்பி இணங்குகிறேன். முந்திய பாடம் ஒன்றின், நான் ஒரு நிகழ்ச்சி நடந்த*பின்பு* அது தொடர்பான தனிநபருடைய சுயாதீன சித்தத்தில் இடையிடாமலேயே நாம் அந்த நிகழ்ச்சியைப்பற்றி அறிய இயலும் என்று கருத்துத் தெரிவித்திருந் தேன். அதுபோன்றே, தேவன் ஒரு தனிநபரின் தேர்ந்துகொள்ளுதல் பற்றிய

சுயாதீனத்தில் இடையிடாமலேயே, நடைபெறவிருக்கும் விஷயம் ஒன்றை *முன்னதாகவே* அறிய இயலும்.

ஜேம்ஸ் பென்ட்லே என்பவர், எனக்கு ஒரு விவரிப்பைக் கொடுத்தார்.[8] அவர் குழந்தைகளுக்கான ஒரு திரைப்படத்தைத் தனது பேத்தியுடன் அமர்ந்து கவனித்ததைப் பற்றிக் கூறினார். அந்தச்சிறுமி அத்திரைப்படத்தின் கதையை மனப்பாடமாகக் கூறுமளவுக்கு அதை முன்பே பலமுறை கவனித்திருந்தாள். அதில் வரும் பாத்திரங்கள் வசனத்தின் வார்த்தைகளை உச்சரிக்குமுன்பாகவே அவள் அவற்றைக் கூறுவாள் மற்றும் அடுத்து என்ன நடக்கவிருந்தது என்பதை அவள் தனது தாத்தாவுக்குக் கூறுவாள். "எனது பேத்தி, அடுத்து நடப்பது என்ன என்று அறிந்திருந்தாள் என்பது மாத்திரம், அடுத்து வந்த நிகழ்ச்சிக்கு அவளைப் பொறுப்பாளியாக்குவதில்லை" என்று ஜேம்ஸ் கூறினார். பின்பு அவர் புன்முறுவலுடன் "தேவனைப் பொறுத்தவரையில், அவர் அந்தத் தொலைக் காட்சிப்பதிவை ஏற்கனவே கண்டிருந்தார்" என்று கூறினார்.

உங்களுக்குப் பழக்கமானவர்களில் யாரேனும் ஒருவர், தமக்குப் பிரிய மான கதை ஒன்றைக் கொண்டிருக்கிறாரா? அவர் தமது கதையை (நூறாவது முறையாக!) கூறத் தொடங்கும்போது, நீங்கள் அனேகமாக, அடுத்து அவர் என்ன கூறப்போகிறார் என்பதை முன்னெதிர் பார்த்திருக்க முடியும் - ஆனால் அது, அவர் கூறப்போகும் விஷயத்திற்கு உங்களைப் பொறுப்பாளியாக்குவதில்லை. அது நீங்கள் ஏற்கனவே அந்தக்கதையைக் கேட்டிருக்கிறீர்கள் என்று மாத்திரம் அர்த்தப்படுத்துகிறது. இப்படிப்பட்ட ஒப்பீடுகள் யாவும் போதுமானவைகள் அல்ல, ஆனால் இவைகள் குறைந்தபட்சமாக, என்ன நடைபெறும் என்பதற்குப் பொறுப்பாளியாக இராமலேயே, என்ன நடைபெறும் என்பதை அறிதல் சாத்தியமே என்பதை விவரிப்பவைகளாக உள்ளன.

நான் மீண்டும் இதைக் கூறுகிறேன்: தேவனுடைய முன்னறிவைப் பற்றி நீங்களும் நானும் ஒருக்காலும் புரிந்துகொள்ளாதவை நிறைய உள்ளன. இருப்பினும், நாம் அவரது முன்னறிவைப்பற்றி மன எழுச்சியூட்டும் ஒரு சில சத்தியங்களைப் புரிந்துகொள்ள இயலும். தேவன் மனிதகுலத்தைப் படைப்பதற்கு முன்பேகூட, அவர் எதிர்காலத்திற்குள்ளாகக் கண்ணோக்கினார். அதில் அவர் மனிதகுலத்தின் வீழ்ச்சியைக் கண்டு மனிதகுலத்தின் மீட்புக்காகத் திட்டமிட்டார். அந்தத்திட்டத்திற்கு, கிறிஸ்து சிலுவையில் அறையப்படுதல் மற்றும் மகிமையடைதல், மற்றும் சபையின் நிலைநாட்டம் ஆகியவை மைய மாக இருந்தன (நடபடிகள் 2:23ஐக் காணவும்; எபேசியர் 3:10, 11, 21). இதை நாம் இன்னும் அதிகமாகத் தனிப்பட்ட வகையில் கண்ணோக்குவோமாக: தேவன் *நம்மையும் நமது* ஆவிக்குரிய தேவைகளையும் கண்ணோக்கி, *நமக்கு* அளிப்பை ஏற்படுத்தினார். நாம் யாவரும் கர்த்தருடைய முன்னறிவிற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்!

வேதபாட வசனப்பகுதியில் நாம் முன்னோக்கிச் செல்லுகையில், "தேவ னுடைய முன்னறிவை [முன்னதாகவே அவரது திட்டத்தை] பொறுத்த மட்டில் அவரது நோக்கம் என்னவாக இருந்தது?" என்று நாம் கேட்கலாம். பவுல், "எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு [*eikon*] ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" என்று கூறினார் (ரோமர் 8:29ஆ, இ). "முன்குறித்திருக்கிறார்" என்பது, *proorizo* (*pro* ["முன், முன்னதாக"] கூட்டல் *horizo* ["ஒரு எல்லையை அமைக்க, தீர்மானிக்க"]) என்ற

வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[9] இது "முன்தீர்மானிக்க" என்று அர்த்தப்படுகிறது. "ஒப்பாயிருப்பதற்கு" என்பது *summorphos* (*sun* ["உடன்"] மற்றும் *morphe* ["இருந்து"]) என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. இவ்வார்த்தை, ஒருவர் இன்னொருவரைப் போன்ற அதே "வடிவத்தை" கொண்டிருத்தலைக் குறிக்கிறது. ரோமர் 8:29ஐ உங்கள் மனதில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். இயேசுவைப் போன்ற மக்கள் குழுவொன்றைப் படைத்தல் என்பதே, யுகங்களினூடே தேவனுடைய நோக்கமாக இருந்துள்ளது.

மனிதகுலமானது தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்டது (ஆதியாகமம் 1:26ஐக் காணவும்); ஆனால், பாவத்தின் காரணமாக, இது ஒரு உடைந்துபோன உருவமாக, ஒரு உருச்சிதைந்த உருவமாக ஆயிற்று. பின்பு இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். இயேசு, "அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமாக" (கொலோசெயர் 1:15; 2 கொரிந்தியர் 4:4ஐக் காணவும்). "அவருடைய தன்மையின் சொரூபமுமாக" (எபிரெயர் 1:3) இருந்தார். இப்போது, இயேசுவைப் போலாவது என்பதே ஒவ்வொரு கிறிஸ்தவருக்குமான அறைகூவலாக உள்ளது (பிலிப்பியர் 2:5; 1 பேதுரு 2:21; எபேசியர் 1:4ஐக் காணவும்). பிலிப்ஸ் என்பவரின் பொழிப்புரை வேதாகமத்தில், ("God ... chose them to bear the family likeness of his Son") "தேவன் தமது குமாரனுடைய குடும்பசாயலை தாங்கியிருக்கும்படி அவர்களைத் தேர்ந்துகொண்டார்" என்றுள்ளது. இந்தச் செயல்முறையானது இந்த வாழ்வில் தொடங்கியிருக்கிறது, இது கிறிஸ்து மறுபடியும் வரும்போது உச்சக்காட்சியை அடையும். நாம், "... கர்த்தருடைய மகிமையை ... கண்டு ... கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுவோம்" என்று பவுல் எழுதினார் (2 கொரிந்தியர் 3:18). யோவான், "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்ற சிந்தனையைக் கூடுதலாகக் கொடுத்தார் (1 யோவான் 3:2).

நமது வேதபாட வசனப்பகுதி தொடர்ந்து, "தம்முடைய குமாரன் அநேக சகோதருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு"[10] எனக்கூறுகிறது (வசனம் 29அ). "முதற்பேறானவர்" என்பது *prototokos* (*protos* ["முதல்"] கூட்டல் *tikto* ["பெறுதல்"]) என்ற சொல்லிலிருந்து வருகிறது. வேதாகமம் எழுதப்பட்டுக்கொண்டிருந்த காலங்களில், முதற்பேறாகப் பிறந்த மகன் தனிச்சலுகைக்குரிய இடத்தைக் கொண்டிருந்தார்.[11] "முதற்பேறானவர்" என்ற சொற்றொடர், பிறப்பு வரிசைமுறையில் முதலாவது என்பதை மாத்திரமல்ல, ஆனால் முக்கியத்துவத்தில் முதலாவது என்பதையும் அர்த்தப்படுத்த வந்தது. இவ்வாறு NIrV வேதாகமத்தில், ("Christ will be the first and most honored among many brothers") "பல சகோதரர்கள் நடுவில் கிறிஸ்து முதலாமவராகவும் மிகவும் கனம்பெற்றவராகவும் இருப்பார்" என்றுள்ளது.

தேவன் தமது நித்தியதிட்டத்தில், இயேசுவை மாபெரும் ஆவிக்குரிய குடும்பத்தின் முன்னோடியாக இருக்கும்படி முன்குறித்தார். அந்த வீட்டில் (சபையில்; 1 தீமோத்தேயு 3:15), தேவன் நமது தகப்பனாக இருக்கிறார். இயேசு நமது "மூத்த சகோதரராக" இருக்கிறார், மற்றும் நாம் சகோதர சகோதரிகளாக இருக்கிறோம். கிறிஸ்து நம்மை, "சகோதரர்" என்று அழைக்க "வெட்கப்படவில்லை" என்பதை உணர்ந்தறிதல் எவ்வளவு ஆச்சரியமாக உள்ளது (எபிரெயர்

*2:11).*

***நிகழ்காலத்தில்***

*அது, ஆதாமையும் ஏவாளையும் படைப்பதற்கு முன்னதாகவே தேவன் திட்டமிட்டிருந்ததும் தீர்மானம் செய்திருந்ததுமாக இருந்தது. அவர் அந்தத் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தினார் மற்றும் நிகழ்காலத்தில் அவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்? பவுல், "எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்" என்று கூறினார் (ரோமர் 9:30அ). வேறொரு இடத்தில் பவுல், "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு" நாம் அழைக்கப்பட்டோம் என்று கூறினார் (1 கொரிந்தியர் 1:9). "அழைத்தல்" என்ற சொல்லைப் பற்றி நாம் ஏற்கனவே கலந்துரையாடினோம், ஆனால் ஒருசில கூடுதல் குறிப்புகள் முறையானவைகளாக உள்ளன.*

*தேவன் ஒவ்வொருவரையும் கூப்பிடுகிறார் (அழைக்கிறார்) என்பதில் கருத்து ஒன்றுள்ளது. இயேசு, "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள்* எல்லாரும் *என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறினார் (மத்தேயு 11:28). 2 தெசலோனிக்கேயர் 2:14ல், பவுல் சுவிசேஷத்தின் மூலமாகத் தேவன் நம்மை அழைத்தார் என்று கூறினார் - மற்றும் சுவிசேஷம் எல்லாருக்குமானதாக உள்ளது (மாற்கு 16:15). சுவிசேஷத்தைக் கேள்விப்படுகிற ஒவ்வொருவரும் அதன் அழைப்பிற்குப் பதில்செயல் செய்வதில்லை என்பது கவலைக்குரியதாக உள்ளது (ரோமர் 10:16, 17ஐக் காணவும்). இவ்வாறாக "அழைக்கப்பட்டவர்கள்" என்ற சொற்றொடர், தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின்மூலமாக ஆம் என்று கூறியிருப்பவர்களை* மாத்திரம் *குறிக்கிறது என்பதில் கருத்து ஒன்றுள்ளது (ரோமர் 1:6; 1 கொரிந் தியர் 1:24; யூதா 1; வெளிப்படுத்தின விசேஷம் 17:14ஐக் காணவும்).*

*இன்றைய நாட்களில், தேவன் மக்களைச் சுவிசேஷத்தின் மூலமாக அழைத்துக்கொண்டிருக்கிறார் - ஆனால் அவர் இன்னும் வேறென்ன செய் கிறார்? நாம், "... எவர்களை அழைத்தாரோ [யார் விசுவாசத்தில் பதில்செயல் செய்தார்களோ] அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்" (வசனம் 30ஆ) என்று வாசிக்கிறோம். நமது படிப்பில் இந்த வேளையில், "நீதிமானாக்குதல்" என்பது பழக்கப்பட்ட சொற்றொடராகியிருக்க வேண்டும். பவுல், ரோம ருக்கு எழுதிய தமது நிருபத்தில், ஏறக்குறையப் பாதிப்பகுதியை, பாவிகளை நீதிமான்களாக்குவதற்கான தேவனுடைய அடிப்படையை நிலைநாட்டுவதற்குச் செலவிட்டார். "நீதிமானாக்குதல்" என்ற வார்த்தையை நீங்கள் வாசிக்கையில், நீதிமானாக்கப்படுதல் பற்றி, இது வரையிலும் நாம் கற்றுள்ள ஆச்சரியமான சத்தி யங்களை உங்கள் சிந்தையில் மறுகண்ணோட்டமிடவும். சிலுவையினிமித்தம், நம்மில் [தேவன்மீது] விசுவாசம் கொண்டிருப்பவர்கள் நீதிமான்களாயிருந்தனர்* என்பது போன்று *தேவன் எண்ணுகிறார்!*

***எதிர்காலத்தில்***

*29ம் வசனத்தில், பவுல் தெய்வீக நடவடிக்கையின் தொடர்நிகழ்ச்சி யொன்றை விவரிக்கத் தொடங்கினார், இது ஐந்து கண்ணிகள் கொண்ட சங்கிலித் தொடராக உள்ளது. முதன் மூன்றை நாம் கண்டிருக்கிறோம்: முன்னறிதல்,*

முன்குறித்தல், அழைத்தல், மற்றும் நீதிமான்களாக்குதல். நாம் இப்போது இந்தச் சங்கிலித்தொடரின் நான்காவது கண்ணிக்குத் தயாராக இருக்கிறோம்: "எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" (வசனம் 30இ).

"மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" என்பது கடந்தகால வினைச்சொல்லில் கூறப்பட்டிருப்பதால் (கிரேக்க மொழியில் இது ஒருமுறை மாத்திரமே செய்யப்படும் செயலைக் குறிக்கும் aorist வினைச்சொல்லாக உள்ளது), இது நாம் மகிமையுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் தற்போது மகிழ்வுடன் அனுபவித்துக் கொண்டிருக்கும், பிரதிபலிக்கப்பட்ட மகிமையைக் குறிப்பிடக்கூடும் (2 கொரிந்தியர் 3:18; 1 பேதுரு 1:8ஐக் காணவும்). இருப்பினும், பவுல் கிறிஸ்துவின் மறுவருகையின்போது "நமக்கு வெளிப்படுத்தப்பட இருக்கிற மகிமையையே" தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சந்தர்ப்பப்பொருள் சுட்டிக்காண்பிக்கிறது (ரோமர் 8:18; வசனம் 17, 21ஐக் காணவும்). இந்த அப்போஸ்தலர், கொலோசெயருக்கு "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" என்று எழுதினார் (கொலோசெயர் 3:4; 1 பேதுரு 1:7ஐக் காணவும்). எதிர்காலத்தில் இருந்ததைப் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்து இருப்பாரேயானால், அவர் கடந்தகாலத்தை ஏன் பயன்படுத்த வேண்டும்? ஒருவேளை அவர் "முன்னுரைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியானது அதன் நிறைவேற்றம்பற்றி மிகவும் நிச்சயமாயிருக்கும் காரணத்தினால் அது ஏற்கனவே நடந்து முடிந்தது போன்று விவரிக்கப்படுகிற" விஷயமான "தீர்க்கதரிசனக் கடந்தகாலம்" என்பதைப் பயன்படுத்தியிருக்கலாம்.[12]

நீதிமானாக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் நித்தியத்திற்கும் மகிமைப்படுத்தப்படுவார் என்றும், இவர்களில் எவரும் இழந்துபோகப்படச் சாத்தியக்கூறு இல்லை என்றும் பவுல் கூறினாரா? இல்லை, தேவன் - நித்திய வடிவமைப்புள்ள - ஒரு திட்டத்தைக் கொண்டுள்ளார் மற்றும் அது செயல்*படுத்தப்படும்* என்று மாத்திரம் பவுல் வலியுறுத்தினார். தனிநபர்கள் என்ற வகையில், நாம் அந்தத் திட்டத்தைப் பின்பற்றி அதன் அங்கமாகலாம், அல்லது ஆகாதிருக்கலாம்.

- தேவனுடைய அழைப்பை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும் அல்லது புறக்கணிக்க முடியும்.
- நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படக்கூடும், அல்லது நாம் மீட்கப்படாதவர்களாக அப்படியே இருந்துவிடவும் கூடும்.
- நாம் நீதிமான்களாக்கப்பட்ட பின்பு, ஆவியின்படி நடந்துகொண்டு ஒருநாளில் மகிமைப்படுத்தப்படவும்கூடும் அல்லது மாம்சத்தின்படி நடந்துகொண்டு இழந்துபோகப்படவும் கூடும் (ரோமர் 8:13ஐக் காணவும்).

நீங்களும் நானும் தனிநபர்கள் என்ற வகையில் தேவனுடைய திட்டத்தின் நமது வாழ்வைப் பொருந்த வைக்கிறோமா இல்லையா என்பது அதன் நிறைவேற்றத்தைப் பாதிப்பதில்லை. அவரது நோக்கம் எந்த ஒரு நபருடைய மனப்போக்கையும் சார்ந்திருப்பதில்லை. அவருடைய திட்டம் செயல்படுத்*தப்படும்.* ஒரு சிலரே அழைக்கப்பட்டாலும் அல்லது பலர் பதில்

செயல்செய்தாலும் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். தேவனுடைய திட்டம் நிலையானதும் நிச்சயமானதுமாக உள்ளது. கூச்சலும் குழப்பமும் நிறைந்த உலகத்தில், இது ஆறுதலுக்கு மாபெரும் ஆதாரமூலமாக உள்ளது. அண்டம் அர்த்தமும் நோக்கமும் கொண்டுள்ளது. சகல ஜீவன்களும் மாற்றப்பட இயலாத வகையில், தேவனுடைய திட்டம் மற்றும் நோக்கத்தின் வெற்றிகரமான முடிவை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றன.

## முடிவுரை

இந்த எடுத்துரைப்பின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டபடி, ரோமர் 8:29, 30 நேரெதிர்க் கருத்துக்களால் சூழப்பட்ட வேதவசனப்பகுதியாக உள்ளது. இருப்பினும், டக்ளஸ் J. மூ என்பவர் பின்வருமாறு கூறினார்,

> ... தேவன் தாமே மெல்லத் திறந்துவைக்கும் திட்டம் ஒன்றைக் கொண்டுள்ளார், அது நமது எதிர்கால மகிமைக்கென்று முற்றிலும் அளிப்புகளைத் தருகிறது என்பதை விசுவாசிகளுக்கு உறுதிப்படுத்துதல் என்ற பவுலின் பிரதானக் கருத்தின்மீதான கண்ணோக்கை நாம் இழந்துவிடக்கூடாது. நாம் இவ்வசனத்தில் இருந்து இறையியல் கேள்வி களுடன் அல்ல ஆனால் உறுதிப்பாட்டின் புதுப்பிக்கப்பட்ட புலன் உணர்வுடன் வெளிவர வேண்டும் என்று அவர் விரும்புகிறார்: நம்மில் நற்கிரியையைத் தொடங்கின தேவன், அதை இயேசுகிறிஸ்துவின் நாளில் முடிவுக்கு கொண்டு வருவார் (பிலிப்பியர் 1:5).[13]

தேவனுடைய திட்டம் நிறைவேற்றம் அடைய வரும். அந்தத் திட்டத்தின் அனுகூலத்தை நீங்கள் எடுத்துக்கொள்ள விரும்புகிறீர்களா இல்லையா என்பதே கேள்வியாக உள்ளது. நீங்கள் அதை இன்னும் செய்யாதிருந்தால், நீங்களும் இந்த உறுதிப்பாட்டைக் கொண்டிருக்கும்படி, இன்றே உங்களைக் கர்த்தருக்குக் கீழ்ப்படுத்தும்படி உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் (யாக்கோபு 4:7அ; மாற்கு 16:16; வெளிப்படுத்தின விசேஷம் 2:10)!

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

தேவன் தமது திட்டங்களையும் நோக்கங்களையும் எவ்வாறு நிறைவேற்று கிறார் என்பதை விளக்கிச் சித்தரிக்க விரும்பினால், எரேமியா 29:10-14 வசனப் பகுதிகளை நீங்கள் பயன்படுத்தலாம்.

---

குறிப்புகள்

[1]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 246. [2]Jimmy Allen, *Survey of Romans,* 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 82. [3]Moses E. Lard, *Commentary on Paul's Letter to Romans* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 279. [4]பிரென்ச்சு நாட்டைச் சேர்ந்த இறையியலாளரான ஜான் கால்வின் என்பவர் (1509-1564), புரொட்டஸ்டன்டு சீர்திருத்தத்தின் ஒரு முக்கியமான நபராக

*இருந்தார். அவரது எழுத்துக்கள் சீர்திருத்தத்தை வடிவமைப்பதில் பிரதான செல்வாக்குச் செலுத்தின.* [5]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 114. [6]Allen, 82. [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 346 (emphasis mine). [8]James Bentley, remarks following a Bible class, 5 December 2003. [9]Vine, 165. [10]*பொதுவான கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள "சகோதரர்" என்பது கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்களையும் சகோதரிகளையும் குறிக்கிறது.*

[11]*எடுத்துக்காட்டாக, அவர் சுதந்தரத்தில் இரண்டு பங்கைப் பெற்றார் (உபாகமம் 21:17ஐக் காணவும்).* [12]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 168. [13]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 271.